2010 நவம்பர் 11] [திரு. சி. ஞானசேகரன்]

வேண்டும். இதனை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, உடனடியாக கணேசபுரத்தில் 200 கோடி ரூபாயில் கட்டப்படுகிற அந்த அணையின் கட்டுமானப் பணியைத் தடுத்து நிறுத்துவதற்கு, நம்முடைய அரசு எடுத்திருக்கிற நடவடிக்கைகள் என்ன என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

(இ) பன்னாட்டுத் தொழில் நிறுவனத் தொழிலாளர்கள் தொழிற் சங்கங்கள் அமைக்க அனுமதி அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன். (குறுக்கீடு) செல்வி கே. பாலபாரதி என்ன என்று mention பண்ணி விடுங்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினமே தங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வந்திருக்கின்றேன். தமிழகத்தினுடைய தலைநகரமான சென்னையில் பல்வேறு பன்னாட்டு நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் தொழில் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் தமிழக அரசும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்மூலமாக தொழில்களை வளர்ப்பதற்கு பல ஒப்பந்தங்களைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்தத் தொழில் நிறுவனங்கள் தொழில் தகராறு சட்டம், மத்திய அரசால், மாநில அரசால் உருவாக்கப்பட்ட சட்டங்களையே அமல்படுத்துவதில்லை. தொழில் தகராறு சட்டம், குறைந்தபட்சக் கூலிச் சட்டம், தொழிலாளிகள் எவ்வளவு நேரம் வேலை செய்ய வேண்டுமென்பதற்குரிய ஒரு சட்டம். அதுபோன்று contract ஒழிப்பு முறையை கடைப்பிடிக்கக்கூடிய சட்டம், பணியை நிரந்தரப்படுத்துவதற்குரிய சட்டம், இவற்றில் எதையுமே கடைப்பிடிக்காமல் தொழில் நிறுவனங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அங்கு தொழிலாளர்கள் விரும்பக்கூடிய சங்கம் தேவைப்படுகிறது. அந்தச் சங்கத்தினை அங்கீகரிப்பதற்கு அரசினுடைய அனுமதி தேவைப்படுகின்றது.

இந்தச் சூழ்நிலையில், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில், ஏற்கெனவே Hyundai Company-ல் வேலை நீக்கம் செய்யப்பட்ட 32 பேர்களுக்கு உடனடியாக வேலை தர வேண்டுமென்று ஒரு ஒப்பந்தம் போடப்பட்டு, நான்கு மாதங்கள் ஆகியும், அந்தப் பன்னாட்டு

Hyundai Company இதுவரை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னிலையில் போடப்பட்ட ஒப்பந்தத்தைக்கூட நிறைவேற்ற முன்வரவில்லை. NOKIA கம்பெனியில் வேலை பார்த்த ஒரு இளம் பெண் தொழிலாளி விபத்தில் பலியாகி இருக்கிறார். இன்றைக்கு வளர்ந்து வரும் சூழ்நிலையில் இதுபோன்ற பிரச்சினைகளை நாம் சந்திக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, மாநில அரசு தொழிலாளர்கள் சங்கத்திற்குரிய ஒரு சட்டத்தைக் கொண்டுவருவதற்கு முன்வருமா, வராதா? தொழிலாளர் நலன் குறித்து, குறிப்பாக, பன்னாட்டு நிறுவனங்களில் பணி செய்யக்கூடிய தமிழ் தொழிலாளர்கள் நிலை குறித்து என்ன முடிவு, கொள்கை ரீதியாக எடுத்திருக்கிறார்கள் என்பது குறித்து அறிவதற்கு நான் விரும்புகின்றேன். இது குறித்து, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

(ஈ) சிவகங்கை மாவட்டம், விவசாயிகள் பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தில் சேர்ந்தவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை கிடைக்காமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன். *(குறுக்கீடுகள்)* மற்றவர்கள் எல்லாம் உட்காருங்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் விவசாயிகள் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் அதிக அளவில் பங்கேற்கிறார்கள். ஆனால், அந்தத் திட்டத்தில் கணக்கீட்டு முறை என்பது அடிப்படையில் தவறாக இருக்கிற காரணத்தினால், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு முறையான இழப்பீட்டுத் தொகை கிடைக்காத ஒரு நிலை நீடித்துக்கொண்டிருக்கின்றது. இந்த ஆண்டு சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில், மரவமங்கலம், நாட்டரசன்கோட்டை, இளையான்குடி போன்ற பகுதிகளில் மகசூல் என்பது கடுமையாக பாதிக்கப்பட்டு அரசாங்கத்தினுடைய புள்ளிவிவரத்தின் அடிப்படையிலே காளையார்கோவில் பகுதியில் 377 கிலோதான் ஒரு ஏக்கருக்கு சராசரியாக மகசூல் கிடைத்திருக்கிறது. அதேபோல் மரவமங்கலத்திலும் சுமார் 300 கிலோதான் மகசூல் கிடைத்திருக்கிறது. இப்படியிருக்கிற சூழ்நிலையில் அந்தப் பகுதிகளுக்கு அந்த ஒப்பீட்டுக் கணக்கீட்டு முறை தவறாக இருக்கிற காரணத்தினால், அங்கே காப்பீட்டுத் தொகை கிடைக்காமல்,